## இராமாநுசம் பிள்ளை

## வாழி திருநாமம்

பங்குனியில் புனர்பூசம் பார் உதித்தான் வாழியே
பண்புடைய வரதார்யன் திருவடியோன் வாழியே
சங்குடனே திருவாழி சகத்தளிப்போன் வாழியே
சதுர்மறையோ ஈடு பாஷ்யம் சதமுரைப்போன் வாழியே
தங்கு புகழ்ச் சடகோபன் தவமுடையோன் வாழியே
தரணி மிகும் அருளாளர் தாள் தொழுவோன் வாழியே
எங்குமொலி மறை முடும்பை எய்தினான் வாழியே
எழிலுடைய இராமாநுசம் பிள்ளை இணைப் பதங்கள் வாழியே

உத்தமாம் முடும்பை நகர் உதித்த பிரான் வாழியே
உலகாரியன் கலை பலவும் உரைந்தருள்வோன் வாழியே
மத்திமமாம் பதப் பொருளை வாழ்வித்தோன் வாழியே
மகிழ் மாறன் நியமனத்தால் குருகை வந்தோன் வாழியே
அத்திகிரி அருளாளர்க்கு அன்புடையோன் வாழியே
அவனி உய்ய ஆத்தானை அருளினான் வாழியே
சுத்தமுடை புனர்பூச விருச்சகத்தோன் வாழியே
தொல் புகழ் இராமாநுசம் பிள்ளை துணை அடிகள் வாழியே

---